**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 428** **நாள்: 11.12.2025**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு சேமிப்பு கிடங்கில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்ட சரிபார்ப்புப் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (11.12.2025) தொடங்கி நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு சேமிப்பு கிடங்கில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்ட சரிபார்ப்புப் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று (11.12.2025) தொடங்கி நடைபெற்றது.

**பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது** :

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026க்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்த முதற்கட்ட சரிபார்ப்புப் பணி இன்று தொடங்கி ஒரு மாதங்கள் வரை நடைபெறும்.

நாளொன்றுக்கு 250 முதல் 300 இயந்திரங்களை சரிபார்க்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரங்களில் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் பழுதுகள் இருக்கிறதா என்பதை முதலில் பார்வையிட்டு, அதன் பிறகு அந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை திறந்து ஏதேனும் பொருட்கள் இருக்கிறதா எனவும், பட்டன்கள் செயல்படும் வகையில் உள்ளதா எனவும் பார்வையிடுவர். இதனை மூன்று முறை வேறு வேறு குழுக்கள் ஆய்வு செய்வர். ஆய்வு செய்தபின் அனைத்து நிலையிலும் சரியாக உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தனியே எடுத்து வைக்கப்படும். ஏதேனும் பழுதுகள் மற்றும் குறைபாடுகள் இருக்கும்பட்சத்தில் அந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பெங்களூரு Bell நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும். சரியான நிலையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேர்தல் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

தற்போது 6,603 கட்டுப்பாட்டுக் கருவிகள் (Control Unit), 13,631 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM), யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்து

கொள்ளும் 7,310 VVPAT கருவிகள் உள்ளன. இதனை முழுமையாக சரிபார்க்கும் பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று தொடங்கி நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**